சிகரத்தின்

# தினத் தென்றல்

SIGARATTHIN DHINATHENDRAL    தமிழ் சமுதாயத்தின் குரல்    TAMIL DAILY    Rs. 4

Vol:13 ● Issue:200  10.10.2026 ● சனிக்கிழமை ● சென்னை ● கோவை ● திருச்சி ● திருநெல்வேலி ● பக்கம் 4 ● விலை ரூ.4






**த.வெ.க.வுக்கு மக்கள் மிகப்பெரிய அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்**

**அவதூறு பேச்சுக்கு எதிரான வெற்றி: முதல்வர் விஜய்**

**துரோகத்துக்குக் கிடைத்த இடைக்கால வெற்றி!: மு.க.ஸ்டாலின் விமர்சனம்!**












## சட்டசபையில் த.வெ.க. பலம் 109 ஆக அதிகரிப்பு

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் த.வெ.க. வெற்றி!

**சென்னை, அக். 10:**

தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில் த.வெ.க. சார்பில் சத்யபாமா, தி.மு.க. சார்பில் சுகன்யா, அ.தி.மு.க. சார்பில் பானுமதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் லட்சுமணன், நாம் தமிழர் கட்சி சார்பில் கார்த்திகா உள்ளிட்ட 22 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்தத் தொகுதியில் மொத்தம் 2,23,306 வாக்காளர்களில் 1,79,314 பேர் வாக்களித்தனர். இதன் மூலம் 80.30 சதவீத வாக்குகள் பதிவாகின. பதிவான வாக்குகள் 23 சுற்றுகளாக எண்ணப்பட்டன.

**9471 வாக்குகள் வித்தியாசத்தில் சத்யபாமா வெற்றி**

தாராபுரம் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமா 66841 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். தி.மு.க. வேட்பாளர் சுகன்யா 57370 வாக்குகள் பெற்றார். இதன் மூலம் சத்யபாமா 9471 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அ.தி.மு.க. வேட்பாளர் பானுமதி 45280 வாக்குகள் பெற்றார். நாம் தமிழர் கட்சி 5268 வாக்குகளையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1157 வாக்குகளையும் பெற்றன.

தொண்டர்கள் உற்சாகக் கொண்டாட்டம்

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு தொகுதிகளிலும் த.வெ.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அக்கட்சித் தொண்டர்கள் உற்சாகமாகக் கொண்டாடினர். இந்த இடைத்தேர்தல் வெற்றி குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர்கள், கடந்த 4 மாத கால ஆட்சிக்குக் கிடைத்த வெற்றி எனக் கூறி வருகின்றனர்.

இடைத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ள நிலையில், சட்டசபையில் த.வெ.க. பலம் 109 ஆக அதிகரித்துள்ளது. பெரும்பான்மைக்கு இன்னும் 9 இடங்கள் தேவையாக உள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 234 சட்டசபை தொகுதிகளில் மதுராந்தகம் (செங்கல்பட்டு மாவட்டம்), தாராபுரம் (திருப்பூர் மாவட்டம்), கரூர் (கரூர் மாவட்டம்), விராலிமலை (புதுக்கோட்டை மாவட்டம்), பெருந்துறை (ஈரோடு மாவட்டம்), அம்பாசமுத்திரம் (நெல்லை மாவட்டம்), திருச்சி கிழக்கு (திருச்சி மாவட்டம்) ஆகிய 7 தொகுதிகள் காலியாக உள்ளன.

இதில், மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கு கடந்த 6-ந்தேதி இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. பொதுவாக, இடைத்தேர்தல் என்பது ஆளுங்கட்சியை எடைபோடும் தேர்தல் என்பதால், 4 மாத கால த.வெ.க. ஆட்சி மக்களை திருப்திபடுத்தியதா?, அல்லது அதிருப்தியடையச் செய்ததா? என்ற கேள்விகளுடன் வாக்குப்பதிவு நடைபெற்றது.





**த.வெ.க.வுக்கு தேவையான வெற்றி**

தமிழக தேர்தல் வரலாற்றில் இதுவரை நடைபெற்ற இடைத்தேர்தல்களில் பெரும்பாலும் ஆளுங்கட்சியே வாகை சூடியிருக்கிறது. ஆட்சிக்கு மக்கள் அளித்த நற்சான்றாக கருதி அந்த வெற்றியை ஆளுங்கட்சியினர் கொண்டாடினார்கள்.

அதுபோன்ற நிலையே தமிழகத்தில் நடைபெற்று முடிந்த மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலிலும் எதிரொலித்து இருக்கிறது. ஆனாலும், இந்த இடைத்தேர்தல் வெற்றி என்பது ஆளுங்கட்சியான த.வெ.க.வுக்கு மிகவும் தேவையான ஒன்றாக இருந்தது. காரணம், ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை இன்னும் அக்கட்சிக்கு கிடைக்கவில்லை. தேவை 118 ஆக இருக்க, த.வெ.க. தற்போதைய நிலையில் 109 இடங்களையே கைப்பற்றி இருக்கிறது. இன்னும் பெரும்பான்மையை பெற அக்கட்சிக்கு 9 இடங்கள் அவசியம். தமிழகத்தில் இன்னும் 5 தொகுதிகள் காலியாக உள்ளன. அந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தப்பட்டு, அதில் அனைத்திலும் த.வெ.க. வெற்றி பெற்றாலும்கூட, அக்கட்சிக்கான இடங்கள் சட்டசபையில் 114 ஆகத்தான் அதிகரிக்கும். அப்போதும், 4 இடங்கள் த.வெ.க.வுக்கு தேவையாகத்தான் இருக்கும்.

இதையெல்லாம் வைத்து பார்க்கும்போது, த.வெ.க. கூட்டணி ஆட்சியைத்தான் தொடர முடியும் என்ற நிலை இருக்கிறது. என்றாலும், கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலைவிட தற்போது நடைபெற்ற இடைத்தேர்தலில் த.வெ.க.வின் செல்வாக்கு சற்று அதிகரித்து இருக்கிறது என்றே சொல்லலாம்.

**அன்று அ.தி.மு.க....**
**இன்று த.வெ.க....**

ஏனென்றால், மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு தொகுதிகளும் அ.தி.மு.க.வின் கோட்டையாகவே இருந்து வந்தது. கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது, மதுராந்தகம் தொகுதியில் அப்போதைய அ.தி.மு.க. வேட்பாளர் மரகதம் குமரவேல் 7,194 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அப்போது த.வெ.க. வேட்பாளருக்கு 62,090 வாக்குகள் கிடைத்தன. அன்றைக்கு அ.தி.மு.க. வேட்பாளராக களம் கண்ட மரகதம் குமரவேல் இடைத்தேர்தலில் த.வெ.க. வேட்பாளராக போட்டியிட்டு 19,303 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார்.

இதேபோல், பொதுத்தேர்தலின்போது தாராபுரம் தொகுதியில் அப்போதைய அ.தி.மு.க. வேட்பாளர் சத்யபாமா 16,727 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அப்போது த.வெ.க. வேட்பாளருக்கு 46,438 வாக்குகள் கிடைத்தன. அன்றைக்கு அ.தி.மு.க. வேட்பாளராக களம் கண்ட சத்யபாமா இடைத்தேர்தலில் த.வெ.க. வேட்பாளராக போட்டியிட்டு 9,471 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

# தமிழகம் வருகை தரும் மோடியை வரவேற்கும் விதமாக கரூர் நெசவாளியின் சாதனை!

**கரூர், அக்.10:**

பிரதமர் மோடி வரும் 11ம் தேதி, சென்னையில் மெட்ரோ ரயில் சேவை உட்பட, பல்வேறு திட்டங்களை தொடங்கி வைக்க உள்ளார். இந்நிலையில் அவரை வரவேற்கும் விதமாக வும் அவரின் உருவப்படத்தினை நெய்து அசத்தி வரும் அவர் அந்த துணியினை தன் கையால் பாரத பிரதமருக்கு கொடுக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



கரூர் மாவட்டம் சின்னதாராபுரத்தை அடுத்த எலனூரை சார்ந்தவர் பிரபு. இவரது குடும்ப தொழில் நெசவு நெய்தல். சிறு வயது முதலே நெசவில் ஆர்வம் கொண்ட இவர் படிப்படியாக வளர்ந்து தற்போது ஜவுளி ஏற்றுமதி தொழில் செய்து வருகிறார். பிரதமர் மோடி மேல் உள்ள பற்றாலும் அவர் வரும் 11 ம் தேதி தமிழகம் வரும் நிலையில் அவரை வரவேற்கும் விதமாக அவரது கையால் பிரதமர் மோடியின் உருவப்படத்தினை அவரே டிசைன் செய்து, கம்யூட்டரில் ஏற்றி, அதனை தனது சொந்த தறியில் நெசவு செய்து வருகிறார். இன்று தொடங்கிய இந்த பணி, நாளொன்றுக்கு 8 துணி வீதம் 3 நாட்களில் 24 துணிகளை உற்பத்தி செய்ய திட்டமிட்டு தற்போது பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. 40 அங்குலம் உயரம், 10 அங்குலம் அகலம் கொண்ட இந்த துணி தயாரிக்க ரூ 900 ரூபாய் செலவாகும் என கூறும் பிரபு அதனை அவரே அவரது கையில் பிரதமர் மோடிக்கு வழங்க வேண்டும் என்றும் ஆரவத்துடன் தெரிவிக்கும் பிரபு, இந்த துணியினை தமிழக மக்கள் சார்பாகவும், தமிழக நெசவாளர்கள் சார்பாகவும் இந்த ஆடையினை கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

அதே போன்று திருக்குறள் மீதுள்ள பற்றால் திருக்குறளின் பெருமையையும், கரூரின் பெருமையையும் உலகம் முழுவதும் கொண்டு சேர்க்க அவர் உற்பத்தி செய்த துணியில் திருக்குறளை ஸ்கிரீன் பிரிண்ட் செய்து புத்தகமாக தயார் செய்துள்ளார். ஒரு பக்கத்திற்கு 10 குறள் கொண்ட ஒரு அதிகாரன் என 133 பக்கத்தில் 1330 திருக்குறளை அச்சிட்டுள்ளார்.

சுமார் 8 கிலோ எடை யுள்ள இந்த புத்தகத்தை தயாரிக்க 25 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ள இவர் இந்த புத்தகத்தினையும் பிரதமரு க்கு கொடுக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஏற்கனவே இவர் ஜெயிலர் 2 போஸ்டரை தயாரித்தும், திருவள்ளுவர், அப்துல்கலாம் ஆகியோரின் திருவுருவப்படத்தினை நெய்தும் சாதனை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் வம்சாவளி சட்ட நிபுணர் நவநீதம் 'நவி' பிள்ளைக்கு அமைதிக்கான நோபல் பரிசு!

**ஒஸ்லோ, அக்.10:**

சர்வதேச சட்டம், மனித உரிமைகள் மற்றும் அமைதியை மேம்படுத்தும் பணிகளுக்காக, தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தென் ஆப்பிரிக்க சட்ட நிபுணர் நவநீதம் 'நவி' பிள்ளைக்கு 2026-ம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.



உலகின் மிக உயரிய விருதாகக் கருதப்படும் அமைதிக்கான நோபல் பரிசு, இந்த ஆண்டு நவநீதம் 'நவி' பிள்ளைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைதி மற்றும் சர்வதேச சட்டத்தை முன்னெடுப்பதில் அவர் ஆற்றிய பணிகளுக்காக இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு நார்வேயின் ஒஸ்லோ நகரில் இன்று வெளியிடப்பட்டது.

"அமைதி மற்றும் சர்வதேச சட்டத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்காக நவநீதம் 'நவி' பிள்ளைக்கு 2026-ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை வழங்க நார்வே நோபல் குழு முடிவு செய்துள்ளது" என்று அந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு தெரிவித்தது.

தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் இனவெறி ஆட்சிக் காலத்தில் இந்தியத் தமிழ் வம்சாவளி குடும்பத்தில் பிறந்த நவநீதம் பிள்ளை, நிறப் பாகுபாடு, இனப் பிரிவினை மற்றும் ஒதுக்கிவைப்பு ஆகியவற்றை எதிர்த்துநின்று,ஒருவழக்கறிஞராகவும் சட்டத்துறையில்முன்னோடியாகவும் திகழ்ந்தார்.

இனவெறிக்கு எதிராகக் குரல் கொடுத்த நெல்சன் மண்டேலா உள்ளிட்டோருக்காக வாதாடிய நவநீதம் பிள்ளை, சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக குறிப்பிடத்தக்க பணியை ஆற்றினார்.

சிகரத்தின்
தினத்தென்றல்

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த விவசாயி குடும்பத்துக்கு ரூ.14.50 லட்சம் வழங்க சென்னை உயர் நீதிமன்றம்



**சென்னை, அக்.10:** மின்சாரம் தாக்கி உயிரிழந்த விவசாயி குடும்பத்துக்கு 14.50 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூரை அடுத்த நெமந்தம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி செங்கேணி, கடந்த 2021-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி வயலுக்கு சென்றுவிட்டு, கெங்கையம்மன் கோயில் குளக்கரை வழியாக வீடு திரும்பியபோது, வீசிய பலத்த காற்றில் மின்சார கம்பி அறுந்து விழுந்ததில் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவருக்கு இடைக்கால நிவாரணமாக தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 5 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது.

இந்நிலையில்,14 லட்சத்து 54 ஆயிரத்து 880 ரூபாய் இழப்பீடு வழங்கக் கோரி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதையடுத்து செங்கேணியின் மனைவி தனலட்சுமி, மகன்கள் மணிகண்டன், சத்யா ஆகியோர் தங்களது மனுவை பரிசீலித்து உத்தரவிட வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டி.பரதசக்கரவர்த்தி, 14 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் இழப்பீடாக நிர்ணயித்து உத்தரவிட்டார். ஏற்கெனவே 5 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள 9 லட்சத்துக்கு 50 ஆயிரம் ரூபாயை, 2021-ஆம் ஆண்டு முதல் 6 சதவீத வட்டியுடன் வழங்க வேண்டும் என தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்துவைத்தார்.

# பி.எட்., எம்.எட். மாணவர் சேர்க்கை: பதிவு செய்ய அக். 22 வரை அவகாசம் நீட்டிப்பு

**சென்னை, அக்.10:** பி.எட்., எம்.எட். பட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை விவரங்களைப் பல்கலைக்கழகச் சேர்க்கை இணையதளத்தில் பதிவு செய்வதற்கான கால அவகாசம் அக்டோபர் 22-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாகத் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சுயநிதி இணைப்புக் கல்லூரிகளில், 2026-2027 கல்வியாண்டுக்கான பி.எட்., எம்.எட். பட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்பட்டது.

இதற்கான மாணவர் சேர்க்கை விவரங்களைப் பல்கலைக்கழகத்தின் சேர்க்கை இணையதளத்தில் பதிவு செய்வதற்கு அக்டோபர் 6-ஆம் தேதி கடைசி நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அக். 22 வரை கால அவகாசம் நீட்டிப்பு

இந்நிலையில், தற்போதைய மாணவர் சேர்க்கை நிலவரத்தைக் கருத்தில் கொண்டு, சேர்க்கை விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்வதற்கான கால அவகாசத்தை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தகுதியுள்ள மாணவர்களின் சேர்க்கை விவரங்களை அக்டோபர் 22-ஆம் தேதி வரை இணையதளத்தில் பதிவு செய்ய, துணைவேந்தர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் குழு அனுமதி அளித்துள்ளது.

குறிப்பிடப்பட்ட அக்டோபர் 22-ஆம் தேதிக்குப் பிறகு, கால அவகாச நீட்டிப்பு கோரி அளிக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் பரிசீலிக்கப்படாது எனத் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

# ராமேசுவரம் மீனவர்கள் 5-வது நாளாக வேலை நிறுத்தம்: ரூ.10 கோடி வர்த்தக இழப்பு



**ராமேசுவரம், அக்.10:** இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி, ராமேசுவரம் மீனவர்கள் வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து கடந்த அக்டோபர் 3 அன்று கடலுக்குச் எடின் புரோகர் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை இலங்கை கடற்படையினர் சிறைப் பிடித்து, அந்தப் படகில் இருந்த எபிஸ்டன், மத்தியா, ஜான்ஜெய்சன், ஸ்டீவன்சன், சுபார்டன், அபிஸ்டன், மோபிஸ், அந்தோணி பிரதீப், அந்தோணி புரூடஸ் ஆகிய 9 மீனவர்களும் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்க ப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க வேண்டும், இந்திய - இலங்கை இரு நாட்டு மீனவ பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ராமேசுவரம் மீனவர்கள் கடந்த திங்கட்கிழமை வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடங்கினர்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாக ராமேசுவரத்தில் விசைப்படகு மீனவர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் 500-க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் ஆழமற்ற கடற்பகுதிகளில் நங்கூரமிடப்பட்டிருந்தது. மேலும், 2000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கும் செல்லவில்லை. இதனால் சுமார் ரூ.10 கோடி மதிப்பிலான மீன் ஏற்றுமதி வர்த்தக இழப்பும் ஏற்பட்டுள்ளது.

# நள்ளிரவில் நண்பருடன் பேசிக்கொண்டு இருந்த பள்ளி மாணவியை மிரட்டி நகை பறிப்பு



**நெல்லை, அக்.10:** நள்ளிரவில் நண்பருடன் பேசிக்கொண்டு இருந்த பள்ளி மாணவியை மிரட்டி நகை பறித்த வழக்கில் சிறுவன் உள்பட 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

நெல்லை பகுதியைச் சேர்ந்த 15 வயது பள்ளி மாணவி ஒருவர், கடந்த சில நாட்களுக்கு முன்பு நள்ளிரவில் ஆண் நண்பருடன் பேசிக்கொண்டு இருந்துள்ளார். அப்போது அங்கு பைக்கில் வந்த மர்மநபர்கள் 3 பேர் அந்த மாணவியை மிரட்டி அவரிடம் இருந்த 4 கிராம் தங்க சங்கிலி, 2 கிராம் கம்மல் ஆகியவற்றையும், அவரது ஆண் நண்பரிடன் செல்போனையும் பறித்து சென்றுள்ளனர்.

## 2 பேர் கைது

இதுகுறித்து யாரும் புகார் கொடுக்க முன்வராத நிலையில் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து மாநகர போலீஸ் கமிஷனர் தேஷ்முக்சேகர் சஞ்சய் உத்தரவின் பேரில் நெல்லை டவுன் போலீசார் பாதிக்கப்பட்ட மாணவியிடம் புகார் பெற்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அந்த மாணவியிடம் நகை பறித்தவர்கள் மானூர் அருகே உள்ள தென்பத்து கிராமத்தை சேர்ந்த சுரேஷ் (26 வயது) மற்றும் 2 சிறுவர்கள் என்பது தெரியவந்தது.

இதனையடுத்து போலீசார் துரிதமாக செயல்பட்டு சுரேஷ் மற்றும் 17 வயது சிறுவனை கைது செய்தனர். மற்றொரு சிறுவன் வேறு ஒரு வழக்கில் சிக்கி கூர்நோக்கு இல்லத்தில் இருப்பது தெரிய வந்துள்ளது.

# கோவை, நீலகிரி, தேனியில் கனமழைக்கு வாய்ப்பு: வானிலை முன்னறிவிப்பு



**சென்னை, அக்.10:** தமிழகத்தில் கோவை, தேனி நீலகிரி ஆகிய 3 மாவட்டங்களில் இன்று (அக்.10) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: குமரிக்கடல் பகுதிகளிலிருந்து வடக்கு உள் கர்நாடகா வரை தமிழகம் மற்றும் தெற்கு உள் கர்நாடகா வழியாக சுமார் 0.9 கி.மீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (அக்.10) கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

திண்டுக்கல், விருதுநகர், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

அக்.11, 12 தேதிகளில் நீலகிரி, கோவை, திண்டுக்கல், விருதுநகர், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யும்.

அக்.13 முதல் 15-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று (அக்.10) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மழைக்கு வாய்ப்பில்லை.

# த.வெ.க.வுக்கு மக்கள் மிகப்பெரிய அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்: மாணிக்கம் தாகூர்



**சென்னை, அக்.10:** மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்றது. இதில் மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேலும், தாராபுரம் தொகுதியில் சத்யபாமாவும் அபார வெற்றி பெற்றுள்ளனர். இந்நிலையில், இடைத்தேர்தல் வெற்றி குறித்து காங்கிரஸ் மாநில தலைவர் மாணிக்கம் தாகூர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;-

"மதுராந்தகம், தாராபுரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றிக் கூட்டணி வேட்பாளர்கள் மரகதம் குமரவேல், சத்தியபாமா ஆகியோர் மக்களின் பேராதரவோடு அதிக வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

கடந்த 4 மாதங்களாக முதல்-அமைச்சர் சி.ஜோசப் விஜய்யின் ஆட்சிக்கு மக்கள் கொடுத்த நற்சான்றிதழாக இதை கருத வேண்டும். த.வெ.க. ஆட்சிக்கு எதிராக தி.மு.க., அ.தி.மு.க. கட்டவிழ்த்துவிட்ட அவதூறு பிரச்சாரங்களை மக்கள் புறக்கணித்து த.வெ.க. வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்துள்ளனர்.

இந்த இடைத் தேர்தல் வெற்றி என்பது முதல்-அமைச்சர் தலைமையிலான அரசுக்கு மக்கள் மிகப்பெரிய அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். இந்த இரண்டு தொகுதிகளின் இடைத்தேர்தல் முடிவை தமிழக மக்களின் பிரதிபலிப்பாக கருத வேண்டும். தமிழ்நாட்டில் 25 ஆண்டுகளுக்கு பிறகு நடந்த ஒரு இடைத்தேர்தலை பணம் கொடுக்காத தேர்தலாக மாற்றி, மிகப்பெரிய வெற்றி பெற்றிருக்கிற முதல்-அமைச்சர் சி. ஜோசப் விஜய்யை பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தனிநபர் சொத்து தகராறில் அமலாக்கத் துறை கடும் சட்டங்களை பயன்படுத்த கூடாது: சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு



**சென்னை, அக்.10** 'நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துக்கு குந்தகம் விளைவித்தல், ஊழல், பொது மக்களின் பணத்தை மோசடி செய்வது, பொது நலனுக்கு எதிராக நடந்து கொள்வது உள்ளிட்ட குற்றங்களில் அமலாக்கத் துறை கைது நடவடிக்கை எடுக்கலாம். அதைவிடுத்து தனி நபர்களுக்கு இடையேயான சொத்து விவகாரங்களில் தனது கடுமையான சட்டங்களை பிரயோகிக்க வேண்டாம்' என சென்னை உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

சட்டவிரோத பண பரிவத்தனை வழக்கில் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்ட சென்னையை சேர்ந்த அழ அழகப்பன் என்பவர் ஜாமீன் கேட்டு சென்னை உயர் நீதிமன்றத்தை நாடினார்.

மனுதாரின் தந்தை தமக்கு அளிக்கப்பட்ட பவர் ஆஃப் அட்டர்னி உரிமையை தவறாக பயன்படுத்தி, தனது சொத்துகள் மற்றும் பணத்தை மோசடி செய்ததாகவும், அதற்கு மனுதாரர் உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் உடந்தையாக இருந்ததாகவும் பெண் ஒருவர் புகார் அளித்தார்.

அந்தப் புகாரின் அடிப்படையில் கடந்த 2023-ஆம் ஆண்டு சென்னை மத்திய குற்றப் பிரிவு காவல் துறை மனுதாரர், அவரது தந்தை உள்ளிட்ட குடும்பத்தினர் மீது வழக்குப் பதிவு செய்து விசாரித்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் சட்டவிரோத பணபரிவர்த்தனை நடைபெற்றுள்ளதாக கூறி அமலாக்கத் துறை, பணமோசடி தடுப்பு சட்டம் 2002-ன் படி பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து கைது செய்தது.

இந்த ஜாமீன் வழக்கை நீதிபதி என்.ரமேஷ் விசாரணை செய்தார். மனுதாரர் சார்பில் மூத்த வழக்கறிஞர் டி.மோகன் மற்றும் வழக்கறிஞர் ஜி.உமா மகேஸ்வரி ஆகியோர் வாதாடினர்.

இந்த வழக்கில் சட்டவிரோத பண பரிவர்த்தை செய்யப்பட்டதாக கூறப்படும் ரூ.1 கோடிக்கு கீழ் உள்ளதால் மனுதாரருக்கு ஜாமீன் பெற உரிமை உள்ளதாக கூறினர்.

மேலும், இந்த வழக்கில் ஏற்கெனவே மாநில காவல் துறையால் மனுதாரர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளதால் அவரை மீண்டும் கைது செய்வது அரசியல் அமைப்பு சட்டத்துக்கு எதிரானது என அவர்கள் வாதாடினர்.

அமலாக்க துறை சார்பில், சிறப்பு வழக்கறிஞர் பி. சித்தார்த்தன் வாதாடினார். சட்ட விரோத பண பரிமாற்றம் நடைபெற மனுதாரரின் வங்கி கணக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும், இந்த சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடைபெற்றதாக கூறப்படும் காலகட்டத்தில், மனுதாரர் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் வீடு வாங்கியதாகவும் அதற்கான பணத்துக்கு முறையான ஆவணங்களை காட்டவில்லை என கூறி ஜாமீன் வழங்க எதிர்ப்பு தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி என்.ரமேஷ், "நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துக்கு குந்தகம் விளைவித்தல், ஊழல், பொது மக்களின் பணத்தை மோசடி செய்வது, பொது நலனுக்கு எதிராக நடந்து கொள்வார்கள் மீது அமலாக்கத் துறை கைது நடவடிக்கை எடுக்கலாம்.

ஆனால், இதுபோன்ற தனி நபர்களுக்கு இடையேயான சொத்து விவகாரங்களில் கடுமையான சட்டங்களை பிரயோகிக்க வேண்டாம்" என கூறினார். மேலும், இதுபோன்ற வழக்குகளில் தீர்வு காண கிரிமினல் மற்றும் சிவில் சட்டங்கள் ஏற்கெனவே உள்ளதாக கூறி, மனுதாரருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.

# "ஒரு ரூபாய் கூட கொடுக்காமல் இடைத்தேர்தலில் தவெக வெற்றி": அமைச்சர் நிர்மல்குமார்



**சென்னை, அக்.10** "திமுகவும், அதிமுகவும் இந்தத் தேர்தலில் உள்கூட்டு வைத்து வேலை செய்தார்கள். ஆனால், மக்கள் தெளிவாக இருந்தார்கள். இனி வரும் தேர்தல்களிலும் இந்த வெற்றி தொடரும்" என அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், "தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தல் முடிவுகள், முதல்வர் விஜய்யின் 4 மாத நல்லாட்சிக்கான வெற்றி. இனி நடக்கும் அனைத்து தேர்தல்களிலும் தவெகவே வெற்றி பெறும். தமிழகத்தின் மாற்றத்துக்கான அரசாக தவெக அரசு இருக்கும்.

அதிமுகவும் திமுகவும் இந்தத் தேர்தலில் உள்கூட்டு வைத்து வேலை செய்தார்கள். ஆனால், மக்கள் தெளிவாக இருந்தார்கள். இடைத்தேர்தலில் திமுக, அதிமுகவும் மாற்றி மாற்றி புகழ்ந்து கொண்டனர்.

எடப்பாடி பழனிசாமி தனது சுயநலத்துக்காகவும் தனது சொத்துகளையும் மகனையும் காப்பாற்றுவதற்காக ஸ்டாலினையும் உதயநிதியையும் ஆட்சியில் உட்கார வைக்க பாடுபடுகிறார். இவரை நம்பி மக்கள் எப்படிப் ஓட்டுப் போவார்கள்? அதிமுக மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டதற்கு எடப்பாடி பழனிச்சாமிதான் காரணம். அதிமுகவை லெட்டர்பேடு கட்சியாக மாற்றிவிட்டார்.

தாராபுரம் எப்போதும் அதிமுகவின் கோட்டையாகத்தான் இருந்துள்ளது. அதிமுக பெற்ற வாக்குகளில் ஒன்றுகூட பழனிசாமிக்கானது அல்ல. இவை இரட்டை இலைக்கு விழுந்த ஓட்டுகள். தனது சுயநலனுக்காக அதிமுகவை அழித்துவிட்டார்.

திமுக, அதிமுக ஆகிய இரு கட்சிகளும் இடைத்தேர்தலில் பல நூறு கோடிகளை செலவு செய்தனர். தவெக ஒரு ரூபாய் கூட மக்களுக்கு கொடுக்கவில்லை. இருப்பினும் வெற்றி பெற்றுள்ளோம். அமைச்சரவை மாற்றம் குறித்து முதல்வர் விஜய் தான் முடிவெடுப்பார். தேர்தல் எப்போது வந்தாலும், மக்கள் தவெக தலைவர் விஜய்க்கு தான் வாக்களிப்பார்கள்" என்று அவர் கூறினார்.

# பா.ம.க தலைவர் அன்புமணிக்கு பிறந்த நாள்; முதல் அமைச்சர் விஜய் வாழ்த்து



**சென்னை, அக்.10:**

அன்புமணி ராமதாஸ் பிறந்த நாளுக்கு தமிழக முதல்-அமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரான அன்புமணி ராமதாஸ் இன்று தனது 58-வது பிறந்தநாளை கொண்டாடி வருகிறார். இந்த நிலையில் அவருக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 234 சட்டசபை தொகுதிகளில் தவெக 108 இடங்கள் மற்றுமே வெற்றி பெற்றது. பெரும்பான்மை பெற அக்கட்சிக்கு தேவை 118 ஆக இருக்க, த.வெ.க. தற்போதைய நிலையில் 109 இடங்களையே கைப்பற்றி இருக்கிறது. இன்னும் பெரும்பான்மையை பெற அக்கட்சிக்கு 9 இடங்கள் அவசியம்.

முதல்-அமைச்சர் வாழ்த்து

தமிழகத்தில் இன்னும் 5 தொகுதிகள் காலியாக உள்ளன. கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்கள் ஆதரவை வாபஸ் வாங்கி விடுவதாக சொல்லி வந்த நிலையில் தவெகவிற்கு பாமக ஆதரவு அளிக்க இருப்பதாக தகவல்கள் வெளியானது இந்த வந்த நிலையில், இன்று பிறந்தநாள் கொண்டாடும் பாமக தலைவர் அன்புமணியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு முதல்-அமைச்சர் விஜய் வாழ்த்தினார்.

இடைதேர்தல் வெற்றிக்கு வாழ்த்து

அதை தொடர்ந்து நடந்து முடிந்த தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தலில் தவெக வெற்றி பெற்றதற்காக முதல்-அமைச்சர் விஜய்க்கு பாமக தலைவர் அன்புமணியும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தவெகவிற்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியிலிருந்து தங்களின் ஆதரவை தெரிவித்து வந்தன . மேலும் தவெக அரசின் மீது அதிருப்தியில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள், தங்கள் ஆதரவை இடைத்தேர்தலுக்கு பிறகு வாபஸ் வாங்கி விடுவதாக சொல்லி வருகின்றன. இந்த பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் முதல்-அமைச்சர் விஜய், அன்புமணி வாழ்த்து பரிமாற்றம் தவெக மற்றும் பாமக கட்சிகளின் கூட்டணியை உறுதி செய்வது போல் உள்ளது.

# முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவுக்கு எதிரான வழக்கு: நடவடிக்கை எடுக்க உயர்நீதிமன்றம் தடை

**சென்னை, அக்.10:**

திமுக இளைஞரணி மாநாட்டுக்காக ஏரியில் இருந்து சட்டவிரோதமாக மண் எடுத்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மற்றும் அவரது மகனுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது என லஞ்ச ஒழிப்புத் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் தேதி, திருவண்ணாமலையில் திமுக வடக்கு மண்டல இளைஞரணி மாநாடு, நடத்தப்பட்டது. இந்த மாநாட்டு திடலை சமன்படுத்துவதற்காக, அருகில் உள்ள மலப்பம்பாடி ஏரியில்இருந்து சட்டவிரோதமாக 12 ஏக்கர் பரப்பளவுக்கு, 10 முதல் 23 அடி ஆழத்திற்கு மண் எடுக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் அரசுக்கு ரூ.8 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக அறப்போர் இயக்கம் சார்பில், கடந்த ஆகஸ்ட் 13 ஆம் தேதி லஞ்ச ஒழிப்புத் துறையிடம் புகார் அளிக்கப்பட்டது.

இந்த புகாரின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, அவரது மகன் எ.வ.குமரன் மீது லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மற்றும் அவரது மகன் எ.வ.குமரன் தாக்கல் செய்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதிக்க மறுத்திருந்தது.

இந்த நிலையில், இருவர் தரப்பிலும் முன்ஜாமீன் கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி வி. லட்சுமிநாராயணன் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுவுக்கு பதிலளிக்க காவல்துறை தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, எ.வ.வேலு மற்றும் அவரது மகனுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடாது என வாய்மொழியாக உத்தரவிட்டதுடன், முன்ஜாமீன் கோரிய மனுக்களுக்கு லஞ்ச ஒழிப்புத்து றை பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை அக்டோபர் 15-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

# “அவதூறு பேச்சுக்கு எதிரான வெற்றி” - முதல்வர் விஜய்



**சென்னை, அக்.10:**

மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் தமிழக வெற்றிக் கழகத்துக்குக் கிடைத்த வெற்றி, பெண்கள் மீதான அவதூறு பேச்சுக்கு எதிரான வெற்றி என தெரிவித்துள்ள முதல்வர் விஜய், ‘இத்தகைய தேர்தல் வெற்றி இனிமேலும் தொடரும். தொடர்ந்தேதான் தீரும்’ என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தவெக தலைவரும் முதல்வருமான விஜய் வெளியிட்டுள்ள அறிக்கை: “மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தல் முடிவுகள் வெளிவந்துவிட்டன. மக்கள் மனத்தில் நம் தமிழக வெற்றிக் கழகத்துக்கென இருக்கும் முதன்மைச் சக்திக்கான முதலிடமும், நமது மனசாட்சி உள்ள மக்களாட்சி மீதான நம் சொந்தங்களின் ஆழ்மன விருப்பமும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு உள்ளன.

வாக்குகளுக்கு ஒரு பைசா கொடுக்காமல், யாரையும் பட்டியில் அடைத்து அவமானப்படுத்தாமல், திருமங்கலம், ஈரோடு கிழக்கு ஃபார்முலா என்று எந்த ஃபார்முலாவும் இல்லாமல் அன்பு, பாச, உறவு ஃபார்முலா மற்றும் ஜனநாயகம் காக்கும் ஃபார்முலாவை வைத்து வென்ற தேர்தல் இது.

தமிழகம், ஊழல் சக்திகளின் கோட்டை இல்லை. மாறாக, மாபெரும் மக்கள் சக்தியின் கோட்டை, மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்ற அன்பு மிக்க தூய சக்தியின் கோட்டை என்பதை நிரூபித்துள்ளது. தமிழக இடைத்தேர்தல் வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில், பணநாயகச் சூத்திரத்தையே அடித்து நொறுக்கிப் பெற்றுள்ள வெற்றியே இது.

கண்டகண்ட பேரங்கள் நடந்ததாக அவதூறு பேசிய மிருகக் குணப் பேச்சுக்கு எல்லாம் மக்கள் தகுந்த பதிலடியைத் தரமாகத் தந்துள்ளனர். அப்படிப் பேசியவர்களை மக்கள் வெகுதூரத்தில் ஒதுக்கி வைத்து, அவர்கள் மனத்தில் மீண்டும் தோல்வி பாரத்தை ஏற்றி உள்ளனர்.

இரண்டு தொகுதிகளிலும் நாம் இரண்டு நாள்கள் பிரசாரம் மேற்கொண்டதை நக்கலாகவும் நையாண்டியாகவும் பேசியவர்களுக்குத்தான் இப்போது மக்கள் பதிலடி தந்துள்ளனர். இதேபோல கடந்த ஏப்ரல் மாதம் நடந்த சட்டமன்றப் பொதுத்தேர்தலிலும், தமிழகம் முழுக்கப் பிரசாரம் செய்ய அன்றைய தீய சக்தி தி.மு.க., நம்மை அனுமதித்து இருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை மக்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும்.

நம்மைப் பொறுத்தவரை, என்றைக்கும் நாம் மக்கள் பக்கம்தான் நிற்போம். மக்களோடு மக்களாகத்தான் இரண்டறக் கலந்து இருப்போம். அது நம் கடமை மட்டுமன்று. மக்களுக்கான நமது நன்றிக் கடன் அது. எப்போதும் நம் தமிழக மக்களுக்காக முழுமூச்சுடன் நன்றி விசுவாசத்துடனேயே இருப்போம் என்பது நூறு சதவீதம் உறுதி.

இந்த வேளையில், மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளில் வாக்களித்து வெற்றி பெறச் செய்துள்ள நம் சொந்தங்கள் அனைவருக்கும் உங்கள் குடும்பத்தில் ஒருவனாக, உறவாக நன்றி சொல்வதில் மனம் மகிழ்கிறேன். நெஞ்சம் நெகிழ்கிறேன்.

இரண்டு தொகுதிகளிலும் வெற்றிக்காக உழைத்த மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ், வி.சி.க., ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளின் மதிப்பிற்குரிய தலைவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த மாநில, மாவட்ட மற்றும் அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்போதும் சொல்கிறேன். இந்த வெற்றி, தனிப்பட்ட இந்த விஜய்யின் வெற்றியோ, தனிப்பட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றியோ அல்ல. இது முழுக்க முழுக்கப் பெண்கள் மீதான அவதூறு பேச்சுக்கு எதிரான வெற்றி. தரம் தாழ்ந்த வகையில் நடத்தப்பட்ட தனிப்பட்ட தாக்குதலுக்கு எதிரான வெற்றி. அப்பழுக்கற்ற தலைவர்களுக்கும் அவர்களின் தொண்டர்களுக்கும் செய்த துரோகத்திற்கு எதிரான வெற்றி.

மொத்தத்தில், அரசியல் நாகரிகத்திற்குக் கிடைத்த வெற்றி. தனிமனித நாகரிகத்திற்குக் கிடைத்த வெற்றி. எல்லாவற்றுக்கும் மேலாக மக்களுக்குக் கிடைத்த வெற்றி. வாக்காளர்களுக்குக் கிடைத்த வெற்றி. இது இனிமேலும் தொடரும். தொடர்ந்தேதான் தீரும். மீண்டும் மீண்டும் இனிவரப் போகும் வெற்றிகளுக்கும் சேர்த்து இப்போதே நன்றி. நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

# துரோகத்துக்குக் கிடைத்த இடைக்கால வெற்றி!: மு.க.ஸ்டாலின் விமர்சனம்!



**சென்னை, அக்.10:**

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தல் வெற்றியானது துரோகத்துக்குக் கிடைத்த இடைக்கால வெற்றி என தமிழக முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் முடிவுகள் இன்று (அக். 9) வெளியாகியுள்ளன. இடைத்தேர்தல் நடைபெற்ற இரண்டு தொகுதிகளிலும் ஆளுங்கட்சியான தவெக வெற்றி பெற்றுள்ளது.

இத்துடன், 2 தொகுதிகளிலும் எதிர்க்கட்சியான திமுக 2 ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதுபற்றி, திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில்,

“துரோகத்துக்குக் கிடைத்த இடைக்கால வெற்றி பொய் பிம்ப அரசியலின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது! நடந்து முடிந்த மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு தொகுதியிலும் மிகக்கடுமையாகத் தேர்தல் பணியாற்றிய தொண்டர்கள், முன்னணியினர், உடன்பிறப்புகள், கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்றத் தேர்தல் முடிந்த ஐந்தே மாதத்தில் திணிக்கப்பட்டதுதான் இந்த இடைத்தேர்தல். வாக்களித்த மை அழிவதற்கு முன்னால் மக்களின் விருப்பத்தை அழித்துவிட்டு இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவியை விட்டு விலகி, அடுத்த நிமிடமே ஆளும் கட்சியில் சேர்ந்தார்கள். அப்பட்டமான ஜனநாயகப் படுகொலை நடந்தது. அதனால்தான் இந்த இடைத்தேர்தல் நடந்தது. பதவி விலகிய இருவரையே வேட்பாளர்களாக அறிவித்து, தேர்தலைச் சந்தித்தது ஆளும்கட்சி.

அதிகார பலம், ஆட்சி பலம், பணபலம், போலீஸ் பலம் ஆகியவற்றைப் பக்கபலமாக வைத்து த.வெ.க. இந்தத் தேர்தலை எதிர்கொண்டது. சினிமா கவர்ச்சி பலத்தை மட்டுமே நம்பி அரசியல் களத்தில் குதித்து - பெரும்பான்மை பலம் இல்லாவிட்டாலும் குதிரை பேரங்களின் மூலமாக முதல்வர் ஆகியுள்ள விஜய், இந்த இடைத்தேர்தலிலும் ரீல்ஸ் காட்சிகளே கைகொடுக்கும் என்று நம்பினார்.

டீ குடித்தார், டிராக்டர் ஓட்டினார், முருங்கைக்காய் பறித்தார், தெருத்தெருவாகப் போனார். எந்தவொரு இடைத்தேர்தலுக்கும், ஒரு முதல்வர் பதவியில் இருப்பவர் இப்படித் தெருத்தெருவாகப் போனது இல்லை. இந்த இரண்டு தொகுதியில் வெற்றி பெற்றால்தான் தனக்கு இனி அரசியல் வாழ்க்கை என்ற முடிவோடு செயல்பட்டார். நான்கு நாட்கள் இரண்டு தொகுதியிலும் இருந்துள்ளார் முதலமைச்சர். வெளியூரில் இருந்து இறக்கிவிடப்பட்ட ஆட்கள், அவர் போகும் சாலைகள் அனைத்தும் வைக்கப்பட்ட பேரிகேட், கொடுக்கப்பட்ட அன்பளிப்புகள், அமைச்சர்களுக்கு மட்டும் எவ்வளவு செலவு செய்துள்ளேன் என்று ஆளும்கட்சி வேட்பாளரே அளித்த வாக்குமூலங்கள் இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும்போது இந்த வெற்றியை அடைய த.வெ.க. எவ்வளவு பதற்றத்தில் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

ஐந்து நிமிடம் பேசினாலே கொத்து புரோட்டா போட்டுவிடுவார் என்று சொல்லப்பட்டவரை நான்கு நாட்கள் கொளுத்தும் வெயிலில் அலைய வைத்துக் கொத்து புரோட்டா போட்டுவிட்டார்கள் மக்கள். கட்சி, தேர்தல், மக்கள் பணிகள் என்றால் என்னவென்று முதலமைச்சர் விஜய் இனியாவது உணர்ந்து செயல்பட வேண்டும்” எனக் கூறியுள்ளார்.

# மதுராந்தகம், தாராபுரத்தில் வைப்புத்தொகையை இழந்த நாம் தமிழர் கட்சி, கம்யூனிஸ்ட்டுகள்!



**சென்னை, அக்.10:**

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி, கம்யூனிஸ்ட்டு கட்சிகள் வைப்புத் தொகையை இழந்துள்ளனர்.

மதுராந்தகத்தில் இடைத்தேர்தலில் தனித்து போட்டியிட்ட நா.த.க, வேட்பாளர் ஜானகிராமன் 2,083 வாக்குகளையும், தாராபுரம் தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளர் கார்த்திகா சுமார் 5,000 வாக்குகளையும் பெற்று வைப்புத் தொகையை இழந்தனர்.

மதுராந்தகம் தொகுதியில் தனித்து போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் பா. சுகந்தி வெறும் 1,506 வாக்குகளையும், தாராபுரம் தொகுதியில் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் லட்சுமணன் வெறும் 1,157 வாக்குகள் மட்டுமே பெற்று வைப்புத்தொகையை இழந்தனர்.

# யுபிஐ வரிக்கு எதிராக கோவையில் வணிகர்கள் ஆர்ப்பாட்டம்!



**கோவை, அக்.10:**

கோவையில் வியாபாரிகளை பாதிக்கும் வகையில் ஆன்லைன் யுபிஐ பணப் பரிவர்த்தனைகளுக்கு வரி விதிக்கும் முறையை கைவிடக் கோரி, தமிழ்நாடு வியாபாரிகள் சங்கப் பேரவை சார்பில் கோவையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கோவை ரேஸ் கோர்ஸ் பகுதியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, தமிழ்நாடு வியாபாரிகள் சங்கப் பேரவை மாநிலத் தலைவர் முத்துக்குமார் தலைமை வகித்தார்.

கோவை மண்டலத் தலைவர் சுதர்சன், மாநில துணைத்தலைவர்கள் தங்கசாமி, திருவேல்முருகன், மாநில செயலாளர் வேதநாயகம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பா ட்டத்தில், யுபிஐ மூலம் நடைபெறும் பணப் பரிவர்த்தனைகளுக்கு கூடுதல் வரி விதிக்கப்பட்டால் சிறு, குறு மற்றும் நடுத்தர வணிகர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு வியாபாரிகளும் பாதிக்கப்படக்கூடும் என வலியுறுத்தப்பட்டது.

வணிகர்களின் நலன் மற்றும் வணிகச் செயல்பாடுகளை கருத்தில் கொண்டு, யுபிஐ பரிவர்த்தனைக்கு வரி விதிக்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும் என மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், வணிகர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இதில், கிழக்கு மாவட்டத் தலைவர் ஜெபத்துரை தலைமையில் கிழக்கு மாவட்ட நிர்வாகிகளும், மேற்கு மாவட்டத் தலைவர் ஜெயமுருகன் தலைமையில் மேற்கு மாவட்ட நிர்வாகிகளும், வடக்கு மாவட்டத் தலைவர் கிஷோர் தலைமையில் வடக்கு மாவட்ட நிர்வாகிகளும், தெற்கு மாவட்டத் தலைவர் சேர்மகன் தலைமையில் தெற்கு மாவட்ட நிர்வாகிகளும், திருப்பூர் மாவட்டத் தலைவர் ஆத்திச்செல்வன் தலைமையில் திருப்பூர் மாவட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வியாபாரிகள் சங்கப் பேரவையின் மாநில, மண்டல, மாவட்ட, ஒன்றிய மற்றும் கிளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் என ஏராளமான வியாபாரிகள் திரளாக கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் மூலம் வணிகர்களின் கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.





சிகரத்தின்
# தினத்தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17

E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174





# ஐபிஎல் சூதாட்ட வழக்கு: எம்.எஸ். தோனி பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

**சென்னை, அக்.10:**

நூறு கோடி ரூபாய் மான நஷ்டஈடு கோரிய வழக்கில், முன்னாள் கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனியின் வாக்குமூலத்தை விடியோ பதிவு செய்யக் கோரிய வழக்கில் ஓய்வுபெற்ற ஐபிஎஸ் அதிகாரி சம்பத்குமார் தாக்கல் செய்த மனுவுக்கு தோனி பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 2013 ஆம் ஆண்டு நடந்த ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பான வழக்கு குறித்த தொலைக்காட்சி விவாதத்தில், தனக்கு எதிராக அவதூறு கருத்துக்கள் கூறியதாக, ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி சம்பத்குமார், தனியார் தொலைக்காட்சிக்கு எதிராக நூறு கோடி ரூபாய் மானநஷ்டஈடு கோரி, கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனி, 2014-ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கில், தோனியின் வாக்குமூலத்தை பதிவு செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், தோனியின் வாக்குமூலத்தை விடியோ பதிவு செய்யக்கோரி, ஓய்வுபெற்ற ஐபிஎஸ் அதிகாரி சம்பத் குமார் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.





அந்த மனுவில், வாக்குமூலம் பதிவை கண்காணிக்க நீதிபதி ஒருவரை நியமிக்க வேண்டும்; விடியோ பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தை எடிட் செய்யாமல் தனக்கு வழங்க உத்தரவிட வேண்டும்; வாக்குமூல பதிவை, ஐந்து நட்சத்திர விடுதி அல்லது தனியார் பங்களாக்களில் நடத்தாமல், நீதிமன்றம் அல்லது அரசு கட்டடங்களில் நடத்த வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி ஹேமந்த் சந்தன் கவுடர் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில், வாக்குமூலத்தை விடியோ பதிவு செய்யவும், வாக்குமூலம் பதிவு செய்யப்படுவதை அரசு கட்டடம் அல்லது நீதிமன்றத்தில் நடத்த உத்தரவிட வேண்டும் எனவும் கோரப்பட்டது.

அப்போது, குறுக்கிட்ட நீதிபதி, ஐந்து நட்சத்திர விடுதியில் தோனியின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதில் என்ன பிரச்னை? அதற்கான செலவுகளை அவர்கள்தானே செய்யப்போகிறார்கள்? என கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து, தோனி தரப்பில் பதிலளிக்க அவகாசம் கேட்கப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, ஐபிஎஸ் அதிகாரி சம்பத்குமார் தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளிக்க தோனிக்கு உத்தரவிட்டு விசாரணையை அக்டோபர் 29-ஆம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# தஞ்சாவூர் ரயில் நிலைய முகப்பில் பெரிய கோயில் மாதிரி முன் இருந்த இந்தி பெயர்ப் பலகை அகற்றம்

**தஞ்சாவூர், அக்.10:**

தஞ்சாவூர் ரயில் நிலைய முகப்பு பகுதியில் பெரிய கோயில் மாதிரி முன் இந்தியில் பெயர்ப் பலகை வைக்கப்பட்டதைக் கண்டித்து போராட்டம் நடத்த திமுகவினர் திரண்ட நிலையில், அந்தப் பெயர்ப் பலகை அகற்றப்பட்டது. அதேபோல, தமிழ், ஆங்கில மொழியில் இருந்த பலகைகளும் அப்புறப்படுத்தப்பட்டன.

அம்ரித் பாரத் திட்டத்தில் தஞ்சாவூர் ரயில் நிலையம் ரூ.21 கோடியில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இதில், ரயில் நிலைய முகப்பு பகுதி தஞ்சாவூர் பெரிய கோயில் மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இங்கு தஞ்சாவூர் சந்திப்பு என்ற பெயர்ப் பலகை தமிழ். ஆங்கிலம், இந்தி ஆகிய 3 மொழிகளில் வைக்கப்பட்டிருந்தது.

இதில் பெரிய கோயில் மாதிரிக்கு முன், இந்தி பெயர்ப்பலகையும், அதன் இரு புறமும் தமிழ் மற்றும் ஆங்கில பெயர்ப் பலகைகளும் பொருத்தப்பட்டிருந்தன.

இதையறிந்த தமிழ் ஆர்வலர்கள், அரசியல் கட்சியினர் உள்ளிட்டோர் அங்கு திரண்டு, பெரிய கோயில் மாதிரி முன் தமிழ் பெயர்ப் பலகையைப் பொருத்த வேண்டும் என்றும், அங்குள்ள இந்தி பெயர்ப் பலகையை வேறு பகுதிக்கு மாற்ற வேண்டும் என்றும் கோரி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




இதே கோரிக்கையை வலியுறுத்தி எம்.பி. ச.முரசொலி, எம்எல்ஏ துரை. சந்திரசேகரன், முன்னாள் எம்எல்ஏக்கள் டி.கேஜி. நீலமேகம், மகேஷ் கிருஷ்ண சாமி, மேயர் (பொறுப்பு) அஞ்சு கம் பூபதி, முன்னாள் மேயர் சண். ராமநாதன் உள்ளிட்ட திமுக வினர் ரயில் நிலையம் முன்பு நேற்று காலை திரண்டனர்.

இதையடுத்து, ரயில்வே தொழிலாளர்கள் சென்று இந்தி உட்பட 3 பெயர்ப் பலகைகளையும் அகற்றியதால், திமுக வினர் ஆர்ப்பாட்டம் நடத்தாமல் கலைந்து சென்றனர்.

# வாக்காளர் பட்டியலில் புதிதாக பதிவு செய்ய அக். 10, 11- ல் சிறப்பு முகாம்

**சென்னை, அக்.10:**

சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் புதிதாக பதிவு செய்ய சிறப்பு முகாம்கள் நாளை மற்றும் நாளை மறுநாள் இரண்டு நாட்களில் 16 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெற உள்ளது.

இதுதொடர்பாக சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.எஸ்.சமீரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத தகுதியுள்ள வாக்காளர்கள் மற்றும் புதியதாக பதிவு செய்யவுள்ள இளம் / முதல் முறை வாக்காளர்களை பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம்கள் சனிக்கிழமை (10.10.2026) மற்றும் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை (11.10.2026) ஆகிய இரண்டு நாட்களில்



காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள அனைத்து 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெற உள்ளது.

எனவே, வாக்காளர் பட்டியலில், இடம் பெறாத தகுதியுள்ள வாக்காளர்கள் மற்றும் புதியதாக பதிவு செய்யவுள்ள இளம் / முதல் முறை தகுதி வாய்ந்த வாக்காளர்கள், உரிய ஆவணங்களுடன் சிறப்பு முகாமினை அணுகி, வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களைப் பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநராக பிரேம் ஆனந்த் சின்ஹா ஐபிஎஸ் நியமனம்

**சென்னை, அக்.10:**

தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநராக பிரேம் ஆனந்த் சின்ஹா ஐபிஎஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் செயல்பட்டு வந்த அருண் ஐபிஎஸ் கடந்த ஜூலை மாதம் பணியிடமாற்றம் செய்யப்பட்டார். பின்னர், மகேஸ்வரி ஐபிஎஸ் லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டது. ஆனால், தமிழக லஞ்ச ஒழிப்புத்துறைக்கு முழுநேர இயக்குநர் நியமிக்கப்படாமல் இருந்து வந்தது.

பிரேம் ஆனந்த் சின்ஹா நியமனம்

இந்நிலையில், தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநராக பிரேம் ஆனந்த் சின்ஹா ஐபிஎஸ்-ஐ நியமனம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தாம்பரம் காவல் ஆணையராக இருந்த பிரேம் ஆனந்த் சின்ஹா லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல், சென்னை காவல் ஆணையர் அமல்ராஜ் ஐபிஎஸ் தாம்பரம் ஆணையர் பொறுப்பையும் கூடுதலாக வகிப்பார் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

# தமிழக உள்துறை செயலர் உள்பட முக்கிய துறை செயலர்கள் இடமாற்றம்

**சென்னை, அக்.10:**

தமிழக உள்துறை செயலர் உள்பட முக்கியத் துறைச் செயலர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதன் விவரம் வருமாறு:

தமிழக உள்துறை செயலர் கே.மணிவாசன் இடமாற்றம் செய்யப்பட்டார். அவருக்குப் பதிலாக கார்த்திக் ஐஏஎஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கே.மணிவாசன் நில நிர்வாகத் துறை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் ஆணையம் முன்போதைய உள்துறைச் செயலர் தீரஜ்குமாரை மாற்றிவிட்டு கே.மணிவாசனை புதிய உள்துறை செயலராக நியமித்தது.

இந்நிலையில், இப்போது உள்துறை செயலர் மட்டும் மாற்றப்பட்டிருக்கிறார். அவருக்குப் பதிலாக கார்த்திக் ஐஏஸ் உள்துறை செயலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல், தேனி ஆட்சியர் வைத்திநாதன் மாற்றப்பட்டு அவர் குடிநீர் வடிகால் வாரிய இணை நிர்வாக இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

குடிநீர் வடிகால் வாரிய இணை நிர்வாக இயக்குநராக இருந்த சிவகிருஷ்ணமூர்த்தி தேனி ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வேளாண் துறை செயலராக என். வெங்கடேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மின்சார வாரியத் தலைவராக ராஜேஷ் லக்கானி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நிதித்துறை செலவின செயலராக அருண்ராய் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறாக தலைமைச் செயலர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிறுவனங்களில் மழைநீர் தேங்கினால் ரூ.10 ஆயிரம் அபராதம்: அமைச்சர் அருண்ராஜ் எச்சரிக்கை

**சென்னை, அக்.10:**

பெரு நிறுவனங்கள் தங்களது வளாகத்தை அதிகளவு மழைநீர் தேங்கும் வகையில் அலட்சியமாக வைத்திருந்தால், ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை மாநகராட்சி சார்பில் வடபழனி, கெங்கையம்மன் கோயில் தெருவில் காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது. இந்த முகாமை சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கைகளையும் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கினார்.

பின்னர், அவர் கூறியதாவது: டெங்கு தடுப்பு நடவடிக்கையின் முக்கிய பகு



தியாக கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாத அவசியம். அனைவரும் தங்கள் வீட்டுக் குள்ளும், வீட்டைச் சுற்றிலும், குறிப்பாக மொட்டை மாடியிலும் சென்று பாருங்கள். தேவையற்ற பாத்திரங்கள், சிறிய தொட்டிகள், மூடி, ஆட்டுக்கல், பயன்படுத்தாத பூந்தொட்டிகள் என எதுவாக இருந்தாலும், மழைநீர் தேங்கக் கூடிய வாய்ப்புள்ள எவற்றையும் அப்புறப்படுத்துங்கள்.

பெரிய நிறுவனங்கள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவன அமைப்புகள் தங்கள் வளாகங்களை மழைநீர் தேங்கும் வகையில் அலட்சியமாக வைத்திருந்தால் உடனடியாக ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். மீண்டும் அது தொடர்ந்தால் கூடுதல் அபராதம் விதிக்கப்படும். சென்னை மாநகராட்சி சார்பில் கடந்த 2 மாதங்களில் மட்டும் ரூ.7.50 லட்சம் வரை அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. பலமுறை எச்சரித்தும் நடவடிக்கை எடுக்காத வீடுகளுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த ஜனவரி.1 முதல் அக்.7-ம் தேதி வரை 21,655 பேருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது 301 பேர் டெங்கு பாதிப்பால் உள் நோயாளிகளாக சிகிச்சையில் உள்ளனர். சென்னையில் கொசு ஒழிப்புப் பணிகளுக்காக சென்னை மாநகராட்சியில் மட்டும் 3,700 கொசு ஒழிப்புப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரிகளில் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு சிறப்பு அரியர் தேர்வு

**சென்னை, அக்.10:**

சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் முதன்மை வளாகக் கல்லூரிகளான கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பா செட்டி தொழில்நுட்பக் கல்லூரி, மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் பள்ளி ஆகிய நான்கு கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு இந்த முன்னோடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிற தகுதிகளைப் பெற்றிருந்தும், அரியர் காரணமாக மட்டுமே தகுதியான மாணவர்கள் வளாக நேர்காணல் நடைமுறைகளில் இருந்து விடுபட்டுவிடக்கூடாது என்பதே இத்தேர்வின் முக்கிய நோக்கமாகும். நடப்பு 2025-26 வேலை வாய்ப்புப் பருவத்தில்(ஜூன் -செப்டம்பர்) இந்த நான்கு வளாகக் கல்லூரிகளிலும் சராசரியாக 72 சதவீதம் மட்டுமே வேலைவாய்ப்பு பதிவாகியுள்ளது. குறிப்பாக, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரியில் மிகக் குறைந்த அளவாக 59 சதவீத வேலைவாய்ப்பே கிடைத்தது. இத்தகைய சரிவிற்கான காரணத்தைக் கண்டறிய பல்கலைக்கழக நிர்வாகம் கூகுள் படிவம் மூலம் ஆய்வு மேற்கொண்டது. அந்த ஆய்வில், 90 சதவீத மாணவர்கள் வேலை வாய்ப்பு முகாம்களில் பங்கேற்க ஆர்வம் காட்டிய போதிலும், அவர்களில் 40 சதவீதத்தினர் ஏதேனும் ஒரு பாடத்தில் அரியர் வைத்திருந்ததால் தகுதி பெற முடியாமல் போனது தெரியவந்தது. குறிப்பாக அழகப்பா கல்லூரியில் 7-வது செமஸ்டர் பயிலும் 720 மாணவர்களில் சுமார் 250 பேருக்கு அரியர் இருப்பதும், பெரும்பாலானோர் கணிதம் மற்றும் முக்கியப் பாடங்களிலேயே அரியர் வைத்துள்ளதும் தெரியவந்தது. இதனை திருத்தும் நடவடிக்கையாக இந்த சிறப்புத் தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பல்கலைக்கழக பதிவாளர் வி. குமரேசன் கூறுகையில், "இது மாணவர்களுக்கு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் பிரத்யேக வாய்ப்பாகும்; ஆண்டுதோறும் இத்தகைய தேர்வுகள் நடத்தப்பட மாட்டாது.

ஒவ்வொரு ஆண்டும் இத்தகைய வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணம் மாணவர்கள் மத்தியில் உருவாகிவிடக் கூடாது என்பதில் பல்கலைக்கழகம் உறுதியாக உள்ளது" என்று தெரிவித்தார்.


Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor: S.SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.